பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
25 06 2025 7 15
புதன்கிழமை இரவு
ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச உருளைக்கிழங்கு மையத்தின் தெற்காசிய மண்டலப் பிரிவினை ஆக்ராவில் ஏற்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. அவசரநிலை பிரகடனம் என்பது ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்திய நிலநடுக்கம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.
3. அவசர நிலைக்கு எதிராக பிரதமர் திரு நரேந்திர மோடியின் செயல்பாடுகளை எடுத்துரைக்கும் புத்தகத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுதில்லியில் வெளியிட்டார்.
4. சர்வதேச அணுசக்தி முகமையுடனான ஒத்துழைப்பை ரத்து செய்வதற்கான தீர்மானம் ஈரான் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
5. ஆசிய இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Abhay Singh-**அனாகத் சிங் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்---

சர்வதேச உருளைக்கிழங்கு மையத்தின் தெற்காசிய மண்டலப் பிரிவினை ஆக்ராவில் ஏற்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், உணவு மற்றும் ஊட்டச் சத்து பாதுகாப்பை அதிகரிப்பதற்கு இந்த நடவடிக்கை உதவிடும் என்றார்.

விவசாயிகளுக்கான வருவாய் அதிகரிக்கும் என்றும் கூடுதல் வேலைவாய்ப்பு உருவாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

புனே மெட்ரோ ரயில் திட்டத்தின் 2 ஆம் கட்ட பணிகளுக்கும், முதல் கட்ட விரிவாக்கத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

3 ஆயிரத்து 626 கோடி ரூபாய் செலவில் இதற்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் கூறினார்.

புனேயின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

**Jharia** நிலக்கரி சுரங்க திட்டம் காரணமாக பாதிக்கப்படும் மக்களுக்கு மறுவாழ்வு வழங்க வகை செய்வதற்கான மாற்றியமைக்கப்பட்ட திட்டத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாக அவர் கூறினார்.

இதற்கென நிதியம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும், திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>><><><><<

அவசரநிலை பிரகடனம் என்பது ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்திய நிலநடுக்கம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

உத்ராகண்டின் நைனிடாலில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், 50 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்து கொள்வதற்காக பிறப்பிக்கப்பட்ட அவசர நிலை, ஜனநாயகத்தின் குரல் வளையை நெரித்ததாக அவர் கூறினார்.

இதன் பாதிப்புகளை இளையோர் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் திரு ஜெக்தீப் தன்கர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே, அவசர நிலை பிரகடனத்தின் போது அதற்கு எதிராக பிரதமர் திரு நரேந்திர மோடியின் செயல்பாடுகளை எடுத்துரைக்கும் புத்தகத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுதில்லியில் வெளியிட்டார்.

அந்த காலக்கட்டத்தில் ஆர் எஸ் எஸ் உறுப்பினராக இருந்த திரு நரேந்திர மோடி அவசர நிலைக்கு எதிராக நடத்திய போராட்டம் குறித்து இந்த புத்தகத்தில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள பிரதமர், அவசர நிலை பிரகடன காலத்தில் தமது பயணம் குறித்து இந்த புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அவசர நிலைக்கு எதிரான இயக்கத்தின் மூலம் தாம் பல்வேறு அனுபவங்களை பெற்றுள்ளதாக அவர் அதில் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும் என்ற உறுதிப்பாடு தமக்கு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசர நிலை காலத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தங்களது கருத்துக்களை சமூக வலைதளத்தில் தெரிவிக்குமாறும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன் கொடுமைகளை தற்போது இளையோர் அறிந்து கொள்ள முடியும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட தினம், அரசியல் சாசன படுகொலை தினமாக இன்று கடைபிடிக்கப்பட்டது.

இதனையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அந்த காலக்கட்டத்தில் நாடே அச்ச உணர்வில் இருந்ததாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர், 1 லட்சத்திற்கும் மேற்பட்ட சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர், தொழிற்சங்க தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எவ்வித விசாரணையும் இன்றி சிறைகளில் அடைக்கப்பட்டதாக கூறினார்.

அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் காங்கிரஸ் இவ்வாறு செயல்பட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

உத்தரப்பிரதேசத்தின் லக்னோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், அவசர நிலை காரணமாக அரசியல் சாசனம் சிதைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

உத்ராகண்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர்சிங் தாமி, ஜனநாயகத்தை காப்பதற்காக போராடியவர்களை கவுரவித்தார்.

இமாச்சலப்பிரதேசத்தில் பிஜேபி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்று அவசர நிலை பாதிப்புகள் குறித்து எடுத்துரைத்தனர்.

>><><><<

அவசர நிலை பிரகடனம் என்பது ஜனநாயகத்தின் கறுப்பு அத்தியாயங்களாகவே இருக்கும் என்று மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

அரசியல் சாசன படுகொலை தினத்தை முன்னிட்டு இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

அவசர நிலை காலத்தின் கொடுமைகளை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இந்த தினம் கடைபிடிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த காலக்கட்டத்தில் பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டதாகவும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>><><><<

சிபிஎஸ்இ 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் அடுத்த ஆண்டு முதல் வருடத்திற்கு இரண்டு முறை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்ட தேர்வு அனைவருக்கும் கட்டாயம் என்றும், இரண்டாம் கட்ட தேர்வை பொறுத்தவரை விருப்பத்தின் அடிப்படையிலானது என்றும் சிபிஎஸ்இ கூறியுள்ளது.

இந்த இரண்டு கட்ட தேர்வுகளில் பங்கேற்கும் மாணவர்கள் கூடுதல் மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்று சிபிஎஸ்இ தேர்வு கட்டுப்பாட்டாளர் திரு சன்யம் பரத்வாஜ் கூறியுள்ளார்.

>><><><><<

ஆந்திராவில் முதலீடு செய்ய முன்வருமாறு அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு தொழிலதிபர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

விஜயவாடாவில் நடைபெற்ற இந்திய தொழில் மற்றும் வர்த்தக சபை சம்மேளனத்தின் தேசிய நிர்வாகக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

தொழில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையை தமது அரசு ஏற்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தொழில் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எளிமையாகவும் விரைவாகவும் மேற்கொள்வதை தமது அரசு உறுதி செய்துள்ளதாகவும் திரு சந்திரபாபு நாயுடு கூறினார்.

>><><><><<

ஒடிசாவில் உலக புகழ்பெற்ற ஜெகநாத் ரத யாத்திரைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

பூரியில் இந்த ரத யாத்திரை நாளை மறுநாள் தொடங்குகிறது.

இதற்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை கூறியுள்ளது.

ஜெகநாத் கோயிலை சுற்றி காவல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூரி நகர் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

சர்வதேச அணுசக்தி முகமையுடனான ஒத்துழைப்பை ரத்து செய்வதற்கான தீர்மானம் ஈரான் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஈரானில் உள்ள அணுசக்தி தளங்களை குறிவைத்து அமெரிக்கா தாக்குதல் நடத்தியதற்கு பின்னர் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக ஈரான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த தீர்மானத்திற்கான வாக்கெடுப்பின் போது 223 உறுப்பினர்கள் அவையில் இருந்ததாகவும் இதில் 221 பேர் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எஞ்சிய இருவரில் ஒருவர் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்ததாகவும், ஒருவர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்றும் அந்த தகவல்கள் கூறுகின்றன.

ஈரான் நாட்டின் இறையாண்மையையும் மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யவேண்டியதன் பொறுப்பு தங்களுக்கு உள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

இதற்கிடையே, இஸ்ரேலுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் 700 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான குற்றச்சாட்டின் பேரில் 3 பேர் தூக்கில் இடப்பட்டதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இரட்டையர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் 3 இணைகள் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அபைய் சிங் - வேலவன் செந்தில் குமார் 11-5, 11-9 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் **Wong – Tang** இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அனாகத் சிங் - ஜோஸ்னா சின்னப்பா இணையும், கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதியாட்டத்தில் **Abhay Singh-**அனாகத் சிங் இணையும் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

--------------------

ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Paras Gupta** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

கொழும்புவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் அவர் 5-1 என்ற புள்ளிக் கணக்கில் கத்தாரின் **Ali Al Obaidli** ஐ வென்றார்.

------------

ஐரோப்பிய கோப்பைக்கான ஜூனியர் ஜூடோ போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

பெர்லினில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 63 கிலோ எடைப்பிரிவில் **Linthoi Chanambam** தங்கப்பதக்கத்தையும், 52 கிலோ எடைப்பிரிவில் **Nungshithoi Chanu** வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் நான்கு நாடுகளுக்கு இடையேயான ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 4-3 என்ற கோல்கணக்கில் ஸ்பெயினை வென்றது.

**>> End of News <<**